திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட் கனிமத்தை வெட்டி தனியார்கள் கொள்ளை லாபம் பெறுவதாக அறிகிறேன். அப்படி தனியார்கள் கொள்ளை அடிப்பதை தடுக்க, அரசே கிராபைடை கொண்டு உப தொழில்களை ஆரம்பிக்க முன் வருமா? அத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாரும் இதுவரை கிராபைட் வெட்டி எடுக்க அனுமதிக்கப்படவில்லை. அரசின் சார்பிலே அந்தப் பகுதிகளிலே தொழிற்சாலை நிறுவப்படுமேயானால், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். மைனிங் போன்ற வேலைகளை முதலிலே பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராபைடு என்ற மூலப் பொருளை வெட்டி எடுத்து, அதைத் தனியாக செய்ய விருப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே அவருடைய மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது, இது குறித்து மைனிங் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மைனிங் வேலை என்பது மட்டும் அல்லாமல், கிராபைடிலிருந்து க்ருசிபிள்ஸ் போன்ற பொருள்களை உடனடியாக மேன்னியூபேக்சர் செய்து, அதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின் போது நான் என்ன சொன்னேனோ, அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். மைனிங் என்பதில் முதற் கட்டமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு, மைனிங் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு அவ்வாறு மைனிங் செய்கிற வேலையைத் தொடங்கவும், கிடைக்கிற கிராபைட்டை வைத்துக் கொண்டு மூலத் தொழிற்சாலையையும், உப தொழிற்சாலையையும் நிறுவுவதற்கான திட்டம் பற்றி சொல்லி, அதற்கென 2 கோடி ரூபாய் கனி வள நிறுவனத்தின் மூலமாக அரசு ஒதுக்கியிருக்கிறது. மற்ற விவரங்கள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

சட்ட கல்லூரியில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

*வினா எண் 644—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா —

1982 மார்ச் 24]

(அ) சட்டக் கல்லூரியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாண வர்களுக்கு இப்போது வழங்கப்படும் உதவித் தொகை மிகவும் குறைவு என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உதவித் தொகையை உயர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) மாநில அரசுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் சென்னையில் ரூ. 70 வீதமும், மாவட்டங்களில் ரூ. 55 வீதமும் உண்டி உறைவிடத் தொகை வழங்கப்படுகிறது. இதற்கு ீமல் ஆகும் செலவினத்தை ஒவ்வொரு மாணவருக்கும் கடனாக ரூ. 1,200 வழங்கப்படுகிறது. மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் தற்பொழுது ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 80 முதல் ரூ. 100 வரை பராமரிப்புத் தொகை வழங்கப்படு கிறது. மேற்படி உண்டி உறைவிடத் தொகையை உயர்த்தி மத்திய அரசு சமீபத்தில் ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ் வொரு மாணவருக்கும் ரூ. 125 முதல் ரூ. 145 வரை உதவித் தொகை கொடுக்கப்படும். இவ்வாணை ஜூலை 1981 முதல் அமுல்படுத்தப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் பயிலும் ஆதித் திராவிட வகுப்பு மாணவர்களுக்கு சென்னை நகரத்திலே ரூ. 70 என்றும், மாவட் டங்களிலே ரூ. 55 என்றும் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். இந்தத் தொகை எப்பொழுது நிர்ணயிக்கப் பட்ட தொகை. இதை வைத்துக் கொண்டு ஒரு சட்டக் கல்லூரி மாணவனுக்கு உணவு கொடுக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையானது மிகவும் குறைவானது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும் மைய ரசு தற்போது உயர்த்தியிருக்கிற காரணத்தின் அடிப்படை யில், இயக்குநர் அவர்கள் இந்த உதவித் தொகையை, மாநில அரசு உதவித் தொகை பெறுகிற மாணவர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்ற செயற் குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விரைவாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச் சர் அவர்கள் சொல்கிறார்கள். விரைவாக என்றால், இந்த ஆண்டே அது அமுலுக்கு வருமா ? மேலும் எவ்வளவு தொகையை உயர்த்தப் போகிறீர்கள் ? அதை ரூ. 150 என்ற அளவுக்காவது உயர்த்த அரசு முயற்சிக்குமா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி இவைகளை யெல்லாம் அரசு பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையை வழங்குகிற போது மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கு வைத்துக் கொண்டு வழங்குகிறீர்களா ? அல்லது அவர்களுடைய குடும்பங்களின் பொருளாதார பின்னணியை வைத்து பார்த்துக் கொடுக்கிறீர்களா ? அப்படி என்று சொன்னால், அந்த மாணவர்களுடைய குடும்பச் சூழ்நிலை மிகவும் ஏழ்மையாக இருந்தால் 150 ரூபாய் என்பதைக் கூட இன்னும் உயர்த்திக் அதை இந்த ஆண்டே கொடுக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்களின் குடும்ப சூழ்நிலையை அடிப்படையாக வைத்துத்தான் இந்த உதவித் தொகையை நாம் வழங்குகிறோம் என்பதோடு மட்டும் அல்ல, அரசைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த விடுதிகளில் பயிலுகிற மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கவும் தனியாக உதவித் தொகையை அளிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் அதனை பரிவோடு அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

சின்னதாராபுரத்தில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 625.—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் வட்டம், சின்னதாராபுரத்தில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதற்கான ஊர்களின் முன்னுரிமைப் பட்டியல் அரசினரால் அரசு ஆணை எண் 2819, உள்துறை, நாள் 18–10–1979 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில் சின்னதாராபுரம் இடம் பெறவில்லை. பட்டியலில்புதியதாக ஒரு ஊரைச் சேர்ப்பதாயின் அந்த ஊரின் மக்கள்தொகை, தீ விபத்து அபாயங்கள் குறித்து பரிசீலனை செய்வதல்லாமல் அவ்வூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் எந்த தீயணைப்பு நிலையமும் இல்லாமல் இருக்கவேண்டும். ஏற்